# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2013/31 - 2017 අප්‍රේල් මස 07 වැනි සිකුරාදා - 2017.04.07

*2013/31 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு**

இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் 1999.03.05 ஆந் திகதிய 1069/ 19ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானப் பத்திரத்தின் மூலம் பிரசுரிக்கப்பட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தொழில்நுட்ப உதவியாளர் சேவை பற்றிய சேவைப் பிரமாணக்குறிப்பு மற்றும் அதற்குக் காலத்துக்குக்காலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கிணங்க எடுக்கப்படட்ட அல்லது அதன் கீழ் எடுக்கப்பட்டுள்ளதாக கருதப்படும் அல்லது ஏதாவது நடவடிக்கைகளுக்கு பாதிப்பற்ற வகையில் கீழ் காணப்படும் பொறியியல் உதவியாளர் சேவையின் சேவை பிரமாணக்குறிப்பு பதிலீடு செய்யப்படுகின்றது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எச். எம். காமினி செனெவிரத்ன,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

2017, ஏப்பிறல் 06.

01. **அமுலுக்கு வரும் திகதி.**- இச்சேவை பிரமாணக்குறிப்பு 2016.02.11 ஆந் திகதியிலிருந்து அமுல்படுத்தப்படும்.

02. **நியமன அதிகாரி.**- பயிலுநர் தரம் III,II,I : அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரம் வழங்கப்பட்ட நீர்ப்பாசனப் பணிப்பாளர்நாயகம்.

*விஷேட தரம்.*- அரசாங்க சேவை ஆணைக்குழு.

03. **சேவை வகுதி/ சேவை வகுதிகள்.**- மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமற்ற/ தொழில்நுட்ப (III, II, I ஆம் தரங்கள்)

*முகாமைத்துவ உதவியாளர்.*- அதியுயர் வகுப்பு – Supra Grade (விஷேட தரம்)



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

04. **தொழிற் கூறுகள்** :

* *நிறுவனமொன்றில் நிறைவேற்று உத்தியோகத்தர்களின் பணிகளுக்கு உதவும் வகையிலான நிறைவேற்றுநரால் குறித்துரைத்து ஒப்படைக்கப்படும் ஆளணி நிர்வாகம், நிதி பாதுகாப்பு மற்றும் நிதி உபயோகம், மேற்பார்வை மற்றும் செயற்படுத்தல் போன்ற பணிகள் உள்ளடங்கிய பல்துறை பணிகளை நிறைவேற்றும் சேவை வகுதியாகும்.*

* அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கைக்கு உட்பட்ட வகையில் உள்ளக ரீதியான ஆட்சேர்ப்பு முறையொன்றினூடாக ஆட்சேர்க்கப்படும், சிரேஷ்ட நிறைவேற்று மற்றும் நிறைவேற்று உத்தியோகத்தர்களின் பணிகளுக்கு குறை நிரப்பு/துணைபுரியும்/உதவும் வகையில் அவ்வுத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் பதவிகளுக்கு விசேடமாக ஒப்படைக்கப்படும் நிருவாக / ஆளணி முகாமைத்துவம் , நிதி முகாமைத்துவம் மற்றும் பொருள் முகாமைத்துவப் பணிகள் என்பன ஒப்படைக்கப்படும் சேவை வகுதியாகும்.

05. **சம்பளம் (சம்பளக் குறியீடு, சம்பள அளவுத் திட்டம், ஆரம்ப சம்பள படிமுறை)** :

5.1 *சம்பள குறியீட்டு இலக்கம்* : MN 3 - 2006 A (III, II, I தரம்)

MN 7 – 2006 A ( விஷேட தரம்)

5.2 *சம்பள அளவுத் திட்டம்* :

III, II, I ஆம் தரம் : ரூபா 15,005– 4 X 180- 6 X 240-11 X 320– 20 X 360 – 27,885/-

விஷேட தரம் : ரூபா. 20,030- 11 X 365- 18 X 500- 33,045/-

5.3 *தரங்களுக்கு அமைய ஆரம்ப சம்பள அளவுத் திட்டம்* :

| *தரம்* | *ஆரம்ப சம்பள படிமுறை* | *ஆரம்ப சம்பள நிலை* |
|---|---|---|
| III | படிமுறை 01 | ரூ. 15,005.00 |
| II | படிமுறை 12 | ரூ. 17,485.00 |
| I | படிமுறை 23 | ரூ. 21,045.00 |
| விஷேட | படிமுறை 04 | ரூ. 21,125.00 |

5.4 *பயிலுநருக்காக பயிற்சி பெறும் காலத்திற்குள் வழங்கப்படும் கொடுப்பனவு.-* அ.நி.சு. அறிக்கை இலக்கம் 06/2006 (II) இற்கு இணங்க பயிற்சிக் காலத்தின் போது கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

முதலாவது வருடத்திற்காக ஒரு மாதத்திற்கு ரூ. 12,920/-

இரண்டாவது வருடத்திற்காக ஒரு மாதத்திற்கு ரூ. 13,040/-

மூன்றாவது வருடத்திற்காக ஒரு மாதத்திற்கு ரூ. 13,160/-

06. **சேவைக்குரிய பதவிகள்** :

6.1 *அனுமதிக்கப்பட்ட பதவிப்பெயர், அனுமதிக்கப்பட்ட பதவி எண்ணிக்கைகள் மற்றும் அவற்றுக்கு கையளிக்கப்படும் பணிகள்.*- சேவையின் அவசியம் கருதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்தினால் காலத்திற்குக்காலம் வெளியிடப்படும் சுற்றறிக்கைகளின் அறிவுரைகளினால் மேற்கொள்ளப்பட்டுள்ள மாற்றங்களின் கீழ் பின்வரும் பணிகள் ஒப்படைக்கப்படும்.

| *அனுமதிக்கப்பட்ட பதவிப்பெயர்* | *அனுமதிக்கப்பட்ட தரம்* | *அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கைகள்* | *பணிகள்* |
|---|---|---|---|
| பொறியியல் உதவியாளர் Engineering Assistant | III, II, I | 636 | திணைக்களத்தின் ஒழுங்கு விதிகளுக்கிணங்க நீர்ப்பாசனப் பொறியியலாளரின் மேற்பார்வையின் கீழ் ஒப்படைக்கப்படும் கீழே காணப்படும் பணிகள் :- <br><br> புதிய அல்லது தற்போதுள்ள புவியீர்ப்பு / உயர்த்தல் / சிறிய நீர்ப்பாசனம், வெள்ளம் மற்றும் உவர் நீர் தடுப்புத் திட்டங்களில் நிர்மாணித்தல்/விஸ்தரித்தல் / புனர்நிர்மாணம் செய்தல் /செயற்படுத்தல், பராமரித்தல் மற்றும் நீர் கட்டுப்பாட்டை உற்பத்தித் திறனுடன் செயற்படுத்தும் வேலைக்காக ஆரம்பகட்ட புலனாய்வுகள், முழுமையான புலனாய்வுகளுக்கு அமைவாக நில அளவை மற்றும் மட்டம் எடுத்தல், மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சிவில் பொறியியல் நிர்மாணம் மற்றும் திட்டமிடல், வடிவமைப்பு, உரிய நில அளவைப் படம் தயாரித்தல், கணிய அளவீடு, விலை மதிப்பீடு செய்தல், மதிப்பீடு தயாரித்தல், விபரக் குறிப்புகளுக்கிணங்க பெறுகை ஆவணங்களைத் தயாரித்தல், வேலை மேற்பார்வை, ஒழுங்கமைப்புத் தரக்கட்டுப்பாடு, வெளிக்கள/வேலைத் தளங்களில் உள்ள இயந்திர உபகரணங்கள், எரிபொருள், பொருட்கள் மற்றும் களஞ்சிய முகாமைத்துவம் மற்றும் உரிய கணக்கீடு. வெளிக்கள /பிரிவுகளுக்குரிய பொறுப்பு உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திட்டங்களிலுள்ள திட்ட முகாமையாளர்களாக நிறுவனங்களின் ஒழுங்கமைப்பு அபிவிருத்தி மற்றும் பயிற்சியளித்தல், வேலைப் பரிசோதகர்களின் /தொழில்நுட்ப உதவியாளர்களின், வெளிக்கள உதவியாளர்களின் மற்றும் தொழிலாளர்களின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல், நீர்ப்பாசன கட்டளைச் சட்டங்கள் மற்றும் ஏனைய சட்டங்களால் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்படும் கடமைகள் சம்பந்தமாக வெளிக்கள நடவடிக்கை மற்றும் ஒப்படைக்கப்படும் ஏனைய பொறியியல்சார் துணை தொழிற் பணிகள். |

| *அனுமதிக்கப்பட்ட பதவிப்பெயர்* | *அனுமதிக்கப்பட்ட தரம்* | *அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கைகள்* | *பணிகள்* |
|---|---|---|---|
| பிரிவு உதவியாளர் Divisional Assistant | விஷேட | 65 | நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தினால் காலத்திற்குக்காலம் வெளியிடப்படும் திணைக்கள சுற்றறிக்கை மற்றும் நிதி சுற்றறிக்கைகளின் மூலம் கையளிக்கப்பட்டுள்ள அதிகார பொறுப்பளித்தலுக்கிணங்க பிரதேச நீர்ப்பாசன பொறியிய லாளரின் மேற்பார்வையின் கீழ் பிரிவுகளுக்குரிய கொடுப்பனவு விடயங்களில் பொருள் பட்டியல் மற்றும் கட்டளைகள் பெயர் பட்டியல், பகிர்ந்தளித்தல் அட்டவணை, செய்யப்பட்ட வேலைகளின் அளவீடு, மாதாந்த முன்னேற்ற செலவு, அனைத்து வாகனங்களினதும் அன்றாட ஓட்ட அட்டவணையைப் பரீட்சித்தல், கொடுப்பனவு உறுதிப்படுத்தல், பணத்தினால் செய்யக் கூடிய அனைத்து கொடுப்பனவுகள், இரண்டாம் கையொப்பக்காரர் என்ற வகையில் காசோலைகளில் கையொப்பமிடுதல், சில்லறைக் காசு பதிவுப் புத்தகம் (cash impress register) மற்றும் கொடுப்பனவு பணப் புத்தகம் (payment utility register) என்பவற்றைப் பராமரித்தல் களஞ்சியசாலை, தொழிலாளர் வாகனங்கள் மற்றும் அலுவலக நிர்வாகத்தின் போது பிரதேச பொறுப்பான நீர்ப்பாசனப் பொறியியலாளர் / வதிவிட பொறியியலாளர்களுக்கு உதவுதல் மற்றும் அத்தகைய கடமைகளை மேற்கொள்ளல். |

6.2 *ஒன்றிணைந்த உத்தியோகத்தர் எண்ணிக்கை* :

பொறியியல் உதவியாளர் தரம் III, II, I - 636

பதவியுர்வுக்காக III, II மற்றும் I ஆம் தரங்கள் ஒன்றிணைந்த உத்தியோகத்தர் எண்ணிக்கைக்குட்பட்டதாக கருதப்படும்.

6.3 *பதவி / பதவிகளின் தன்மை* : இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது. விதவைகள் /தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு பங்களிப்பு நிதி செலுத்தல் வேண்டும்.

07. **ஆட்சேர்க்கும் முறை** :

7.1 *ஆட்சேர்க்கப்படும் விகிதாசாரம்* :

| *பிரிவுகள்* | *விகிதாசாரம்* | *விகிதாசாரம் (அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கைக்கு இணங்க)* | |
|---|---|---|---|
| | | ஆண்கள் | பெண்கள் |
| திறந்த | 90% | 75% | 25% |
| மட்டுப்படுத்தப்பட்ட | 10% | 75% | 25% |

7.2 *திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல்*

7.2.1. *ஆட்சேர்க்கும் தரம்*

7.2.1.1. பயிலுநர்களை ஆட்சேர்ப்பதற்கான தகைமைகள் (மூன்று வருட பயிற்சிக்காக)

7.1 *கல்வித் தகைமைகள்* :

(I) *சிங்களம் / தமிழ், ஆங்கில மொழி, கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.*

*அத்துடன்*

(II) *பழைய பாடத்திட்டத்திற்கமைய பௌதீகவியல், தூய கணிதம், பிரயோக கணிதம் மற்றும் இரசாயனவியல் ஆகிய பாடங்களில் துறைக்கு ஏற்புடைய பாடங்களில் ஒரே அமர்வில் கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.*

*அல்லது*

*புதிய பாடத்திட்டத்திற்கமைய கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சையில் உயர் கணிதம் அல்லது இணைந்த கணிதம் பௌதீகவியல் மற்றும் இரசாயனவியல் ஆகிய பாடங்களில் துறைக்கு ஏற்புடைய மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.*

7.2 *தொழில்சார் தகைமைகள்* : ஏற்புடையதல்ல

7.2.1. 111 *ஆம் தரம் (நேரடி ஆட்சேர்த்தல்)*

(அ) *கல்வித் தகைமைகள்* :

(I) சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் இன்னுமொரு பாடத்திற்கும் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

*அத்துடன்*

(II) பழைய பாடத்திட்டத்திற்கமைய பௌதீகவியல், தூய கணிதம், பிரயோக கணிதம் மற்றும் இரசாயனவியல் ஆகிய பாடங்களில் துறையில் உரிய பாடங்களில் ஒரே அமர்வில்கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

*அல்லது*

புதிய பாடத்திட்டத்திற்கமைய உயர் கணிதம் அல்லது இணைந்த கணிதம் பௌதீகவியல் மற்றும் இரசாயனவியல் ஆகிய மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

(ஆ) *தொழில்சார் தகைமைகள்* :

(I) கல்கமுவ, கொத்மலை நீர்ப்பாசன பயிற்சி நிறுவனத்தின் நீர்ப்பாசனப் பொறியியலாளர் டிப்ளோமா

கற்கை நெறியை மேற்கொண்டு சான்றிதழ் பெற்றிருத்தல்.

*அல்லது*

(II) மொரட்டுவை கட்டுபெத்த பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா(சிவில் பொறியியல்)சான்றிதழ் பெற்றிருத்தல்.

*அல்லது*

(III) மட்டக்குளி இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தினால் நடாத்தப்படும் உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா (சிவில் பொறியியல்) சான்றிதழ் பெற்றிருத்தல்.

அல்லது

(IV) கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்பம் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா (சிவில் பொறியியல்) சான்றிதழ் பெற்றிருத்தல்.

அல்லது

(V) இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில் நுட்பவியல் டிப்ளோமா (சிவில் பொறியியல்) சான்றிதழ் பெற்றிருத்தல்.

அல்லது

(VI) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்கமுவினால் அல்லது மூன்றாம் நிலைக்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் மேலே குறிப்பிட்ட கற்கை நெறிக்குச் சமமான கற்கை நெறியைக் கற்று அதற்குரிய சான்றிதழைப் பெற்றிருத்தல்.

இக்கற்கை நெறிகள் NVQ 6 மட்டத்தில் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு** :

(I) III ஆம் தரத்திற்கு நேரடியாக ஆட்சேர்த்தல் மற்றும் பயிற்சிக்காக ஆட்சேர்த்தல் ஆகிய இரு முறைகளிலும் ஆட்சேர்க்கப்படும் போது ஆட்சேர்க்கப்பு தரம் III இற்கு முதலில் ஆட்சேர்த்தல் வேண்டும்.

(II) ஆட்சேர்ப்பு தரமான III ஆம் தரத்திற்கு தகைமையுடைய விண்ணப்ப தாரர்களின் தொகை வெற்றிடத்தின் தொகைக்குப் பற்றாக்குறையாக இருப்பின் மேலே 7.2.1.1 ஆம் பந்திக்கிணங்க தகைமையைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் எஞ்சியுள்ள வெற்றிடங்களுக்கு பயிலுநர்களாக ஆட்சேர்க்கப்படுவர்.

7.2.2. *உடற் தகைமைகள் :*

அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கையில் எப்பிரதேசத்திலும் சேவை புரிவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் தேவையான உடல் மற்றும் உள ரீதியாக தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

7.2.3. *ஏனையவை :*

* இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
* விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
* விண்ணப்பதாரர் உரிய அனைத்து தகைமைகள் மற்றும் குறிப்பிட்ட வயதெல்லை என்பனவற்றை விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தினத்திற்கு அனைத்து விதத்திலும் பூரணப்படுத்தியிருந்தால் மட்டுமே சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவராகக் கணிக்கப்படுவார்.

7.2.4. *வயதெல்லை :*

7.2.4.1. ஆகக் குறைந்த வயதெல்லை : 18 வயது

7.2.4.2. ஆகக் கூடிய வயதெல்லை: 30 வயது

7.2.5. *ஆட்சேர்க்கும் முறை*

எழுத்து மூலப் போட்டிப் பரீட்சை மூலமும் பொது நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையிலும் ஆட்சேர்க்கப்படுவர். எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களில் மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்குக்கு அமைய ஆட்சேர்க்க உத்தேசிக்கும் எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் சாதாரண நேர்முகப் பரீட்சைக்குட்படுத்தி தகுதியுடையவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

7.2.5.1. *எழுத்து மூலப் பரீட்சை*

(பாடப்பரப்பானது அட்டவணை 01 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.)

| *பாடங்கள்* | *உயர்ந்தபட்ச புள்ளிகள்* | *சித்தியடையும் புள்ளிகள்* |
|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | 100 | 40 |
| தொழில்நுட்பப் பரீட்சை வினாத்தாள் | 100 | 40 |

7.2.5.1.1. பரீட்சை நடாத்தும் அதிகாரி : நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்ட நிறுவனத்தினால் நடாத்தப்படும்.

7.2.5.2.2 தொழில்சார் பரீட்சைகள் : ஏற்புடையதல்ல

7.2.5.3. கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை : ஏற்புடையதல்ல

7.2.5.4. பொது நேர்முகப் பரீட்சை : (புள்ளிகள் வழங்கப்படமாட்டாது)

நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்க்கப்படும் நோக்கம் : விண்ணப்பதாரர்களின் தகைமைகள் மற்றும்

சான்றிதழ்கள் பரீட்சித்துப்பார்ப்பதற்காக

7.2.5.4.1. பொது நேர்முகப் பரீட்சை சபையை நியமிக்கும் அதிகாரி : நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்

7.2.6. *விண்ணப்பங்கள் கோரப்படும் முறை* :

அரச வர்த்தமானப் பத்திரத்தின் அறிவித்தலில் பிரசுரித்தல் அல்லது பிரசித்தமான அறிவித்தல் மற்றும் இணையத் தளங்களில் அறிவித்தலைப் பிரசுரிப்பதினூடாக விண்ணப்பங்கள் கோரப்படும்.

7.3. *மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு* :

7.3.1. *ஆட்சேர்க்கும் தரம்*

7.3.1.1. பயிலுநர்களை ஆட்சேர்ப்பதற்கான தகைமைகள் (இரு வருட பயிற்சிக்காக)

(அ) கல்வித் தகைமைகள் :

(I) சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

(ஆ) *தொழில்சார் தகைமைகள்* :

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் மூன்று வருட பகுதி நேர தேசிய தொழில் நுட்பவியல் சான்றிதழ் (சிவில்) கற்கைநெறியில் சித்தியடைந்து NVQ 4 மட்டத்திற்குரிய சான்றிதழைப் (NCT – Civil) பெற்றிருத்தல்.

(இ) *அனுபவம்* :

(I) நீர்ப்பாசனத் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பவியல் தொகுதியில் 3 ஆம் சேவை வகுதியின் தொழில்நுட்பவியல் உதவியாளர் பதவியில் குறைந்தபட்சம் 10 வருட நிரந்தர சேவைக் காலத்தையுடைய உத்தியோகத்தராக இருத்தல்.

7.3.2 *உடற் தகைமைகள்* :

இலங்கையில் எப்பிரதேசத்திலும் சேவை புரிவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் தேவையான உடல் மற்றும் உள ரீதியாக தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

7.3.3. *ஏனையவை* :

I. பதவி உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

II. பதவிக்குரிய துறையில் 05 வருடம் செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள திணைக்கள ஊழியராக இருத்தல்.

III. உடன் முன்னதான 05 வருடத்துக்குள் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

IV. எழுத்து மூலப் போட்டிப் பரீட்சை மூலமும் பொது நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையிலும் ஆட்சேர்க்கப்படுவர். எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களில் மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்குக்கு அமைய ஆட்சேர்க்க உத்தேசிக்கும் எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் சாதாரண நேர்முகப் பரீட்சைக்குட்படுத்தி தகுதியுடையவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

V. எச்சரிக்கை விடுத்தலைத் தவிர கிட்டிய 05 வருடத்தினுள் எவ்வித ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் உள்ளாகாதிருத்தல்.

7.3.4. *வயதெல்லை* :

7.3.4.1. ஆகக் குறைந்த வயதெல்லை : ஏற்புடையதல்ல

7.3.4.2. ஆகக் கூடிய வயதெல்லை : 45 வயது

7.3.5. *ஆட்சேர்க்கும் முறை*

எழுத்து மூலப் போட்டிப் பரீட்சை மூலமும் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்க்கப்படுவர். எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களில் மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்குக்கு இணங்கஆட்சேர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படும்தொகையின் இரு மடங்குக்கு சமமான தொகையினரை கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குட்படுத்தப்பட்டு தகுதியுடையவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

7.3.5.1. *எழுத்து மூலப் பரீட்சை*

(பாடப்பரப்பானது அட்டவணை 03 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.)

| *பாடங்கள்* | *உயர்ந்தபட்ச புள்ளிகள்* | *சித்தியடையும் புள்ளிகள்* |
|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | 100 | 40 |
| தொழில்நுட்பப் பரீட்சை வினாத்தாள் | 100 | 40 |

7.3.5.1.1 பரீட்சை நடாத்தும் அதிகாரி : நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்ட நிறுவனத்தினால் நடாத்தப்படும்.

7.3.5.2.2 தொழில்சார் பரீட்சைகள் : ஏற்புடையதல்ல

7.3.5.3. கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை : விண்ணப்பதாரர்களின் தகைமைகள் மற்றும் சான்றிதழ்கள் பரீட்சித்துப்பார்த்து அதற்கிணங்க புள்ளிகள் வழங்கப்பட்டு திறமை அடிப்படையில் தகைமையுடையோர் தெரிவு செய்யப்படுவர்.

| *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்பு* | *உயர்ந்தபட்ச புள்ளிகள்* | *தெரிவு செய்யப்படுவதற்காக பார்க்கப்படும் குறைந்தபட்ச புள்ளிகள்* |
|---|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 35 | ஏற்புடையதல்ல |
| மேலதிக தொழிற்சார் தகைமைகள் | 25 | |
| மேலதிக அனுபவம் | 25 | |
| ஏனைய தகைமைகள் | 10 | |
| நேர்முகப்பரீட்சையில் வெளிக்காட்டும் திறமை | 05 | |
| மொத்தம் | 100 | |

**குறிப்பு :**

i. மேலேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள புள்ளிகள் வழங்கும் பிரதான துறைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள உயர்ந்தபட்ச புள்ளிகளுடன் ஒவ்வொரு கட்டமைப்பு நேர்முகப்பரீட்சைக்கான விபரங்களடங்கிய புள்ளித் திட்டமொன்று நியமனம் செய்யும் அதிகாரியினால் அனுமதிக்கப்படும்.

ii. கட்டமைப்பு நேர்முகப்பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் மொத்தப்புள்ளிகளின் திறமை அடிப்படையிலும் மற்றும் நிலவும் வெற்றிடங்களின் தொகைக்கேற்பவும் பதவிகளுக்கு ஆட்சேர்க்கப்படுவர்.

7.3.5.3.1. கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை நடாத்தும் அதிகாரி : நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்

7.3.5.4. பொது நேர்முகப் பரீட்சை : ஏற்புடையதல்ல

7.3.6. *விண்ணப்பங்கள் கோரப்படும் முறை* :

அரச வரத்தமானப் பத்திரத்தின் அறிவித்தலில் பிரசுரித்தல் அல்லது பிரசித்தமான அறிவித்தல் மற்றும் இணைய தளங்களில் அறிவித்தலைப் பிரசுரிப்பதினூடாக விண்ணப்பங்கள் கோரப்படும்.

7.4 திறமை அடிப்படையில் ஆட்சேர்த்தல் : ஏற்புடையதல்ல

*08.* **வினைத்திறன் காண் தடை தாண்டல்**

*8.1*

| எந்த வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை என்பது பற்றி | வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையானது எவ்வளவு காலத்திற்கு முன்னர் சித்தியடைதல் வேண்டும் | வினைத்திறன்காண் தடை தாண்டலின் தன்மை எழுத்து மூலப் பரீட்சை/ தொழிற்சார் மூலப் பரீட்சை/சான்றிதழ் கற்கை நெறி / ஏனைய |
|---|---|---|
| முதலாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் | III ஆம் தரத்திற்கு நியமிக்கப்பட்டு 03 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் | எழுத்து மூலப் பரீட்சை (அட்டவணை 04) |
| இரண்டாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் | II ஆம் தரத்திற்கு பதவியுயர்வு பெற்று 03 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் | எழுத்து மூலப் பரீட்சை (அட்டவணை 05) |
| மூன்றாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் | I ஆம் தரத்திற்கு பதவியுயர்வு பெற்று 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் | எழுத்து மூலப் பரீட்சை (அட்டவணை 06) |

**குறிப்பு** :

(அ) **1069/19** ஆம் இலக்கம் மற்றும் **1999.03.05**ஆம் திகதிய அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்தினால் நடாத்தப்பட்ட கனிஷ்ட தொழில்நுட்பப் பரீட்சையில் பூரணமாக சித்தியடைந்திருப்பின் முதலாவது வினைத்திறன் காண் தடை தாண்டலில் சித்தியடைந்தவராக கருதப்படுவார்.

(ஆ) **1069/19** ஆம் இலக்கம் மற்றும் **1999.03.05**ஆம் திகதிய அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சிரேஷ்ட தொழில்நுட்பப் பரீட்சையில் முதலாவது அரைவாசியில் முதலாவது மற்றும் இரண்டாவது தொகுதியின் மற்றும் இரண்டாவது தொகுதியின் “ஆ” விலுள்ள பாடங்களில் சித்தியடைந்திருப்பின் இரண்டாவது வினைத்திறன் காண் தடை தாண்டலில் சித்தியடைந்தவராக கருதப்படுவார்.

(இ) **1069/19** ஆம் இலக்கம் மற்றும் **1999.03.05**ஆம் திகதிய அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சிரேஷ்ட தொழில்நுட்பப் பரீட்சையில் முதலாவது அரைவாசியில் 1 மற்றும் 11 ஆம் தொகுதியும் இரண்டாவது அரைவாசியில் 11 ஆம் தொகுதியின் (அ) பிரிவும், இரண்டாவது அரைவாசியில்11 ஆம் தொகுதியின் (ஆ) விலுள்ள பாடங்களில் சித்தியடைந்திருப்பின் மூன்றாவது வினைத்திறன் காண் தடை தாண்டலில் சித்தியடைந்தவராக கருதப்படுவார்.

(ஈ) இச்சேவை பிரமாணக்குறிப்பு அமுல்படுத்தப்படும் தினத்திற்கு 1 ஆம் தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்ட பின்னர் ஐந்து வருடங்கள் செயற்திறமையாகவும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தை பூரணப்படுத்தி சம்பள ஏற்றங்கள் ஐந்தை (05) பெற்றுக்கொண்டுள்ள உத்தியோகத்தர்கள் 111 ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைவதிலிருந்து விடுவிக்கப்படுவர்.

*8.2.* வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை நடாத்தப்படுவது எவ்வளவு காலத்தில் : வருடத்திற்கு இருமுறை

*8.3.* வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை நடாத்தும் அதிகாரி யார் என்பது பற்றி :

| | |
|---|---|
| முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல்<br>இரண்டாவது வினைத்திறன்காண் தடை தாண்டல்<br>மூன்றாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் | நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் |

09. **மொழித்திறன்**

9.1.

| மொழி | பெற்றுக்கொள்ள வேண்டிய மொழித் தேர்ச்சி |
|---|---|
| அரச கரும மொழி | அரசகரும மொழியல்லாத மொழியூடாக சேவைக்கு இணைக்கப்பட்ட உத்தியோகத்தர்களால் உரிய அரச கரும மொழித்திறன் தகுதிகாண் காலப்பகுதிக்குள்ளே பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |
| ஏனைய அரச கரும மொழி | பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 01/2014மற்றும் அதற்கு இடைநேர்விளைவான சுற்றறிக்கைகளின் ஒழுங்கு விதிகளுக்கிணங்க உரிய மட்டத்தில் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |

10. **பதவியுயர்த்தல்**

10.1 III ஆம் தரத்திலிருந்து II ஆம் தரத்திற்கு பதவியுயர்த்தல்.

10.1.1. சாதாரண செயலாற்றுகைக்கிணங்க

10.1.1.1. பூரணப்படுத்தப்பட வேண்டிய தகைமைகள் :

I. நியமனம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

II. பதவியுயர்த்தலுக்காக தகைமைப் பெறும் தினத்திற்கு சேவை வகுதியின் III ஆம் தரத்தில் குறைந்தபட்சம் பத்து (10) வருடங்கள் செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூரணப்படுத்தி இருப்பதோடு பத்து (10) சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தல்.

III. அனுமதிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டுச் செயல்முறைக்கிணங்க தரமுயர்த்தல் தினத்திற்கு முன்னதான பத்து (10) வருடங்களுக்குள் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதற்கு மேலான செயலாற்றுகையை வெளிப்படுத்தியிருத்தல்.

IV. பதவியுயர்த்தல் தினத்திற்கு உடன் முன்னதாக 05 வருடங்கள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

V. உரிய மட்டத்தில் ஏனைய அரச கரும மொழித்திறனைப் பெற்றிருத்தல் வேண்டும்..

VI. முதலாவது வினைத்திறனகாண் தடை தாண்டல் பரீட்சையை உரிய தினத்தில் சித்தியடைந்திருத்தல்.

10.1.1.2. பதவியுயர்த்தல் முறை :

தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் II ஆம் தரத்திற்கு பதவியுயர்த்தப்படுவதற்காக நியமனம் செய்யும் அதிகாரிக்கு உரிய உத்தியோகத்தரின் முறையான விண்ணப்பத்திற்கிணங்க விண்ணப்பிக்கும் போது,நியமனம் செய்யும் அதிகாரியினால் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டு தகைமைகள் பெற்றுக்கொண்ட தினத்திலிருந்து அமுலாகும் வகையில் மேற்கொள்ளப்படும்.

10.2. II ஆம் தரத்திலிருந்து I ஆம் தரத்திற்கு பதவியுயர்த்தல்.

10.2.1. சாதாரண செயலாற்றுகைக்கிணங்க

10.2.1.1. பூரணப்படுத்தப்பட வேண்டிய தகைமைகள் :

I. பதவியுயர்த்தலுக்காக தகைமைப் பெறும் தினத்திற்கு சேவைத் தொகுதியின் IIஆம் தரத்தில் குறைந்தபட்சம் பத்து (10) வருடங்கள் செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூரணப்படுத்தி இருப்பதோடு பத்து (10) சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தல்.

II. பதவியுயர்த்தல் தினத்திற்கு உடன் முன்னதாக 05 வருடங்கள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

III. அனுமதிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டுச் செயல்முறைக்கிணங்க தரமுயர்த்தல் தினத்திற்கு முன்னதான பத்து (10) வருடங்களுக்குள் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதற்கு மேலான செயலாற்றுகையை வெளிப்படுத்தியிருத்தல்.

IV. இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையை உரிய தினத்தில் சித்தியடைந்திருத்தல்.

10.2.1.2. *பதவியுயர்த்தல் முறை* :

தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் 1 ஆம் தரத்திற்கு பதவி யுயர்த்தப்படுவதற்காக நியமனம் செய்யும் அதிகாரிக்கு உரிய உத்தியோகத்தரின் முறையான விண்ணப்பத்திற்கிணங்க விண்ணப்பிக்கும் போது, நியமனம் செய்யும் அதிகாரியினால் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டு தகைமைகள் பெற்றுக்கொண்ட தினத்திலிருந்து அமுலாகும் வகையில் மேற்கொள்ளப்படும்.

10.3. I ஆம் தரத்திலிருந்து விஷேட தரத்திற்கு பதவியுயர்த்தல்.

10.3.1. சாதாரண செயலாற்றுகைக்கிணங்க

10.3.1.1. *பூரணப்படுத்தப்பட வேண்டிய தகைமைகள்* :

I. சேவைத் வகுதியின் I ஆம் தரத்தில் குறைந்தபட்சம் ஆறு (06) வருடங்கள் செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூரணப்படுத்தி இருப்பதோடு ஆறு (06) சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தல்.

II. பதவியுயர்த்தல் தினத்திற்கு உடன் முன்னதாக 05 வருடங்கள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

III. அனுமதிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டுச் செயல்முறைக்கிணங்க தரமுயர்த்தல் தினத்திற்கு முன்னதான ஆறு (06) வருடங்களுக்குள் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதற்கு மேலான செயலாற்றுகையை வெளிப்படுத்தியிருத்தல்.

IV. மூன்றாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையை உரிய தினத்தில் சித்தியடைந்திருத்தல்.

V. சிரேஷ்ட தொழில்நுட்பப் பரீட்சையில் முதலாவது அரைவாசியில் I மற்றும் II ஆம் தொகுதியும் இரண்டாவது அரைவாசியில் II ஆம் தொகுதியின் (அ) பிரிவும், இரண்டாவது அரைவாசியில் II ஆம் தொகுதியின் (ஆ) விலுள்ள பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

10.3.1.2. *பதவியுயர்த்தல் முறை* :

விஷேட தரத்தில் வெற்றிடம் காணப்படும் போது மேலே காணப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள பொறியியல் உதவியாளர்களின் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டு வெற்றிடம் ஏற்பட்ட தினத்திலிருந்து சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையில் நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையிலும் விஷேட தரத்திற்கு பதவியுயர்த்தப்படுவர்

10.4. **விஷேட குறிப்பு**

சாதாரண மட்டத்தின் செயலாற்றுகைக்கிணங்க பதவியுயர்வை வழங்கும் போது குறிப்பிட்ட தினத்திற்கு வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடையாத உத்தியோகத்தர்களின் பதவியுயர்வுத் திகதியானது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை சித்தியடைவதற்கு தாமதமான காலப்பகுதிக்குச் சமமான காலத்தினால் தாமதப்படுத்தப்படல் வேண்டும்.

11. **பதவிகளுக்கு நியமித்தல்**

11.1. தகைமைகள்

| பதவிகள் | தகைமைகள் | தெரிவு செய்யப்படும் விதம் |
|---|---|---|
| பிரிவு உதவியாளர் | விஷேட தர உத்தியோகத்தராயிருத்தல் | சேவைமூப்பு அடிப்படையில் |

12. **சேவைக்குரிய நிபந்தனைகள்**

பயிற்சிக் காலத்தின் இறுதியில் IIIஆம் தரத்திற்கு ஆட்சேர்த்தல்.

(I) திறந்த பிரிவின் கீழ் பயிலுநராக உள்வாங்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் நீர்ப்பாசனத்திற்குப் பொறுப்பான அமைச்சு / நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் காணப்படும் கல்கமுவ, கொத்மலை மற்றும் கொழும்பு நீர்ப்பாசன பயிற்சி நிறுவனம் என்பவற்றில் நடாத்தப்படும் இரு வருட (02) கோட்பாட்டு ரீதியான மற்றும் ஒரு வருட செயன்முறை ரீதியானதுமாக மூன்று வருடங்களைக் கொண்ட முழு நேர கற்கை நெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்த பின்னர் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் காணப்படும் கல்கமுவ நீர்ப்பாசன பயிலுநர் நிறுவனத்தினூடாக வழங்கப்படும் நீர்ப்பாசனப் பொறியியல் டிப்ளோமா சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமை பெறுவர். மட்டுப்படுத்தப்பட்ட பிரிவின் கீழ் பயிலுநராக உள்வாங்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்தின் பணிப்பிற்கு அமைய கல்கமுவ நீர்ப்பாசன பயிற்சி நிறுவனப் பணிப்பாளரின் மேற்பார்வையின் கீழ் இரு வருட (02) கோட்பாட்டு ரீதியான மற்றும் செயன்முறை ரீதியான பயிற்சி நெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்த பின்னர் மேற்குறிப்பிட்ட சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு முடியுமானதாக இருக்கும்.ஒரு வருட செயன்முறைப் பயிற்சியை வழங்கும் போது பொருத்தமான தேவை மற்றும் வசதி என்பன காணப்படும் விதத்திலேயே இப்பயிற்சி நெறி கட்டமைக்கப்படும். தவணை முறைக்கிணங்க (semester system) செயற்படுத்தப்படும் இக்கற்கை நெறியின் ஒவ்வொரு தவணையின் இறுதியிலும் நடாத்தப்படும் பரீட்சையின் பெறுபேறானது சாதாரண மட்டத்தில் கற்கை நெறியின் முழு திறமையும் தீர்மானிக்கப்படும். இச்சான்றிதழைப் பெறுவதன் மூலம் அவர்கள் பொறியியல் உதவியாளர் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்க்கப்படுவர்.

**குறிப்பு**:- மட்டுப்படுத்தப்பட்ட பிரிவின் கீழ் பயிலுநராக உள்ளெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சியின் இறுதியில் நடாத்தப்படும் பரீட்சையானது திறந்த பிரிவின் கீழ் ஆட்சேர்க்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்காக நடாத்தப்படும் பயிற்சிக்குரிய பரீட்சை மட்டத்தில் அமைதல் வேண்டும்.

(II) குறிப்பிட்ட பரீட்சைகளில் சித்தியடையாத நீர்ப்பாசன பொறியியல் உதவியாளர் பயிலுநர்களுக்கு அவ்வாறு சித்தியடையாததற்கான காரணம், வேலை விடயங்களில் அசட்டையாக இருந்தமை, முயற்சியின்மை அல்லது சீரற்ற வரவு என்பவை அல்லாதவிடத்து, நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்தின் தற்றுணிவின்படி அவர்களின் பயிற்சியை ஆறு மாதத்துக்குக்கு மேற்படாத காலப்பகுதிக்கு நீடித்துக்கொள்வதற்கு இடமுண்டு. சித்தியடையாத நீர்ப்பாசன பொறியியல் உதவியாளர் பயிலுநர்கள் அவ்வாறு நீடித்த பயிற்சிக் காலத்தின் இறுதியில் அவர்களுக்காக நடாத்தப்படும் இறுதிப் பரீட்சை உட்பட குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து பரீட்சைகளிலும் சித்தியடைதல் வேண்டும். அவ்வாறே சித்தியடையாத திறந்த பிரிவின் கீழ் விண்ணப்பித்த பயிலுநர்களின் சேவையானது முடிவுறுத்தப்படும். நீடிக்கப்படும் பயிற்சிக் காலத்தின் போது பயிலுநர்களுக்கு கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

(III) பயிற்சியைப் பெற்றுக்கொள்ளும் காலத்தின் போது பொறியியல் உதவியாளர் பயிலுநர்கள் விரிவுரைகளிலும் செயன்முறைப் பாடங்களிலும் குறைந்த பட்சம் 80%பங்குபற்றி ஒரு திருப்திகரமான பயிற்சிப் பதிவினை கையளித்தல் வேண்டும். யாரேனும் பொறியியல் உதவியாளர் பயிலுநர்கள் அவசியமான குறைந்தபட்ச வருகை மற்றும் திருப்திகரமான சேவைப் பதிவினைக் கொண்டிருக்காத பட்சத்தில் குறிப்பிட்ட பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது. அத்தோடு அவரது பயிற்சிக் காலப்பகுதியும் முடிவுறுத்தப்படும்.

(IV) மட்டுப்படுத்தப்பட்ட பிரிவின் கீழ் பயிலுநராக தேர்ந்தெடுக்கப்பட்ட பயிலுநர்கள், பயிற்சிக் காலத்தின் போது தான் முன்னர் பெற்றுக்கொண்ட சம்பளத்திலேயே இருக்க வேண்டியதோடு பயிற்சிக் காலத்தின் இறுதியில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையும் வரை பொறியியல் உதவியாளர் சேவையின் ஆரம்ப சம்பள

ஏற்றத்திற்கு சமமான வருடாந்த கொடுப்பனவொன்று சம்பளத்திற்கு மேலதிகமாக வழங்கப்படும். பயிற்சிக் காலத்தில் திருப்திகரமாக ஈடுபடும் உத்தியோகத்தர் இரண்டாம் வருடத்தில் தான் இது வரையில் இருந்த சம்பள அளவுத்திட்டத்திலும் மேலான சம்பள நிலையில் அமர்த்தப்படுவதோடு அக்கொடுப்பனவானது தொடர்ந்தும் வழங்கப்படும்.பயிற்சிக் காலத்தைத் திருப்திகரமானதாக பூரணப்படுத்தி பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் 2000.03.02 ஆம் திகதியின் **7/2000**ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் திருத்தியமைக்கப்பட்ட தாபன விதிக் கோவையின் ஒழுங்கு விதிகளுக்கிணங்க சம்பளம் திருத்தியமைக்கப்படும்.

(V) பொறியியல் உதவியாளரின் 111 ஆம் தரத்திற்கு நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பொறியியல் உதவியாளர்களுக்கு கோட்பாட்டு ரீதியான மற்றும் செயன்முறை ரீதியானதுமான பயிற்சியையும் உள்ளடக்கி நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் நிர்ணயிக்கப்படும் ஆறு மாத சேவையுடன கூடிய பயிற்சியொன்று வழங்கப்படும். அத்தோடு கோட்பாட்டு ரீதியானதும் மற்றும் செயன்முறை ரீதியானதுமான பயிற்சியில் நடாத்தப்படும் பரீட்சையில் காட்டும் அவர்களது திறமைகளின் அடிப்படையில் அவர்களது சேவை மூப்பு தீர்மானிக்கப்படும்.

**பொது விடயங்கள்**

பொறியியல் உதவியாளர் சேவையில் இடம் பெறும் வெற்றிடத்தின் தொகைக்கேற்ப நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்தினால் ஆட்சேர்க்கப்படும் தொகை தீர்மானிக்கப்படும். ஆட்சேர்க்கப்படும் பயிலுநர்கள் பயிற்சி ஆரம்பிக்கப்படும் முன்னர் நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்தோடு உடன்படிக்கையொன்றை செய்துகொள்ளல் வேண்டும்.

13. **பதங்களுக்கான பொருள்கோடல்கள் :**

I. "வர்த்தமானிப் பத்திரம்" என்பது அர்த்தமானது இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் வர்த்தமானிப் பத்திரம் எனப் பொருள்படும்.

II. "சேவைப்பிரமாணக்குறிப்பு"என்பது நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியல் உதவியாளர் சேவைப்பிரமாணக் குறிப்பு எனப் பொருள்படும்.

III. "அமுல்படுத்தப்படும் திகதி"என்பது இச்சேவை பிரமாணக்குறிப்பு அமுல்படுத்தப்படும் ஆரம்பத் திகதி எனப் பொருள்படும்.

IV. "சேவை"என்பது நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியல் உதவியாளர் சேவை எனப் பொருள்படும்.

V. "செயலூக்கமுள்ள சேவைக்காலம்"என்பதுஉத்தியோகத்தர் தனது பதவிக்குரிய சம்பளத்தினைப் பெற்று கடமைகளில் ஈடுபடும் சேவைக் காலமாகும். அமைச்சரவையின் கொள்கைக்கிணங்க செயலூக்கமுள்ள சேவைக்காலம் என விஷேடமாக குறிப்பிட்டிருக்கும் சம்பளமற்ற விடுமுறை (லீவு) காலத்தைத் தவிர ஏனைய அனைத்து சம்பளமற்ற விடுமுறைக் காலங்களும் செயலூக்கமுள்ள சேவைக்காலமாக கருதப்பட மாட்டாது.

14. **தரங்களுக்கு உள்ளீர்ப்புச் செய்தல் :**

14.1. இச் சேவை பிரமாணக் குறிப்பு அமுல்படுத்தப்படும் தினத்தில் சேவையிலீடுபட்டிருப்பவர்களுக்கு மட்டும் உரித்துடையதாகும். குறிப்பிட்ட தினத்தில் பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் **06/2006** மற்றும் அதற்கு இடைநேர்விளைவான சுற்றறிக்கைகளினூடாகவும் வழங்கப்பட்டுள்ள MN-03-2006-A சம்பள அளவுத் திட்டத்தின் கீழ் சம்பளத்தைப் பெறும் அனைத்து உத்தியோகத்தர்களும் தாபன விதிக் கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 04 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க கீழே குறிப்பிட்டவாறு உள்ளீர்க்கப்படுவர்.

14.2. அந்தந்த பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட திகதியை அடிப்படையாகக் கொண்டே சேவைக் காலமானது கணிக்கப்படும். எவ்வாறாயினும் உள்ளீர்த்தல் காரணமாக இவர்களது சம்பள ஏற்றத்திகதியில் மாற்றம் ஏற்படாது. அத்தோடு அத்திகதி உள்ளீர்த்தலுக்கு முன்னர் காணப்பட்ட சம்பள ஏற்றத்திகதியானது எவ்வித மாற்றமுமின்றி செயற்படுத்தல் வேண்டும். அவ்வாறே சம்பள மாற்றத்தின் போது உரிய உத்தியோகத்தர் இறுதியாக பெற்றுக்கொண்ட சம்பளம் புதிய சம்பளத்திற்கு நேரொத்த வகையில் தாபன விதிக் கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 4.4 ஆம் பிரிவிற்கிணங்க அதற்கடுத்த உயர்ந்த சம்பள நிலையில் வைக்கப்படவும் கூடாது.

14.3. சேவையின் III ஆம் தரத்திற்கு உள்ளீர்த்தல்

இச்சேவை பிரமாணக்குறிப்பு அமுல்படுத்தப்படும் தினத்தில் நிலவும் சேவைப் பிரமாணக்குறிப்பின் வகுப்பு II தரம் II இல் உள்ள உத்தியோகத்தர்கள்

*14.4. சேவையின் II ஆம் தரத்திற்கு உள்ளீர்த்தல்*

இச்சேவை பிரமாணக்குறிப்பு அமுல்படுத்தப்படும் தினத்தில் நிலவும் சேவைப் பிரமாணக்குறிப்பின் வகுப்பு II தரம் I இல் உள்ள உத்தியோகத்தர்கள்

*14.5. சேவையின் I ஆம் தரத்திற்கு உள்ளீர்த்தல்*

இச்சேவை பிரமாணக்குறிப்பு அமுல்படுத்தப்படும் தினத்தில் நிலவும் சேவைப்பிரமாணக்குறிப்பின் I ஆம் வகுப்பிலுள்ள உத்தியோகத்தர்கள்

*14.6. சேவையின் விஷேடதரத்திற்கு உள்ளீர்த்தல்*

இச்சேவை பிரமாணக்குறிப்பு அமுல்படுத்தப்படும் தினத்தில் நிலவும் சேவைப் பிரமாணக்குறிப்பின் விஷேட தரத்தில் உள்ள உத்தியோகத்தர்கள்

**15. இடைக்கால ஏற்பாடுகள்**

இச்சேவை பிரமாணக்குறிப்பு அமுல்படுத்தப்படும் தினத்திலிருந்து 03 வருட காலம் வரை செயற்படுத்தப்படும். இச்சேவை பிரமாணக்குறிப்பு அமுல்படுத்தப்படும் தினத்திற்கு III மற்றும் II ஆம் தரத்திற்கு உள்ளீர்க்கப்படும் உத்தியோகத்தர்களுக்கு பதவியுயர்வு வழங்கப்படும் போது இடைக்காலத்தினுள் 1999.03.05 ஆம் திகதியின் **1069/19**ஆம் இலக்கத்தையுடைய அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தொழில்நுட்ப உதவியாளர் சேவையின் சேவை பிரமாணக்குறிப்பே ஏற்புடையதாகும். (இவ்விடைக்கால ஏற்பாடுகள் உரித்தாவது புதிய சேவை பிரமாணக்குறிப்பு அமுல்படுத்தப்படுவதற்கு முன்னருள்ள 1999.03.05 ஆம் திகதியின் **1069/19**ஆம் இலக்கத்தையுடைய அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தொழில்நுட்ப உதவியாளர் சேவையின் சேவை பிரமாணக்குறிப்பின் கீழ் ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்காக மட்டுமே ஆகும். ஏனைய நிபந்தனைகள் புதிய சேவைப் பிரமாணக்குறிப்புக்கு இணங்கவாகும்.)

**16. ஏனையவை**

16.1.1 அனைத்து நியமனங்கள் சம்பந்தமாகவும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் **2009.02.20** ஆம் திகதியின் **1589/30**ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள நடைமுறை விதிகளில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள் என்பன ஏற்புடையதாகும்.

16.1.2 இப்பிரமாணக் குறிப்பில் ஒழுங்கு செய்யப்படாத ஏதாயினும் விடயங்கள் இருப்பின், அது சம்பந்தமாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

16.1.3 இப்பிரமாணக் குறிப்பின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில வாசகங்களுக்கிடையயே ஏதேனும் முரண்பாடு எழுமிடத்து சிங்கள வாசகமே மேலோங்கி நிற்கும்.

**அட்டவணை - 01**

01. பரீட்சையின் பெயர் : பொறியியல் உதவியாளர் சேவைக்கு பயிலுநர்களை ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை

02. பரீட்சை பற்றிய விபரம் : (பல்தேர்வு வினாக்கள் அடங்கிய ஒரு வினாப்பத்திரம்)

| *வினாப்பத்திரம்* | *காலம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்தியடையும் புள்ளிகள்* |
|---|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | ஒரு (01) மணித்தியாலம் | 100 | 40 |
| தொழில்நுட்பப் பரீட்சை | இரண்டு (02) மணித்தியாலங்கள் | 100 | 40 |

03. பரீட்சை நடாத்துவதற்கு அதிகாரம் பெற்றவர் : நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம் அவர்களால் அனுமதியளிக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம்

04. பரீட்சை பற்றிய பாடவிதானம்

| வினாப்பத்திரம் | பாடப்பரப்பு |
|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | விண்ணப்பதாரரின் தர்க்க ரீதியான பகுப்பாய்வு ஆற்றல் மற்றும் அவரது தீர்மானம் எடுக்கும் திறமை என்பன பரீசிக்கப்படும். |
| தொழில்நுட்பப் பரீட்சை (கணிதம், பௌதீகவியல்) | அட்சர கணிதம், ஆள்கூற்று கேத்திர கணிதம், நுண் கணிதம், திரிகோண கணிதம், நீர்மநிலையியல் (Hydrostatics),புள்ளிவிபரவியல், மின்னியல், இயந்திரவியல், வெப்பம் ஆகிய பிரிவுகளின் அறிவு பரீட்சிக்கப்படும். |

**அட்டவணை - 02**

01. பரீட்சையின் பெயர் : பொறியியல் உதவியாளர் தரம்IIIஇற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை

02. பரீட்சை பற்றிய விபரம் : (பல்தேர்வு வினாக்கள் அடங்கிய ஒரு வினாப்பத்திரம்)

| வினாப்பத்திரம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடையும் புள்ளிகள் |
|---|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | ஒரு (01) மணித்தியாலம் | 100 | 40 |

03. பரீட்சை நடாத்துவதற்கு அதிகாரம் பெற்றவர் : நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம் அவர்களால் அனுமதியளிக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம்

04. பரீட்சை பற்றிய பாடவிதானம்

| வினாப்பத்திரம் | பாடப்பரப்பு |
|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | விண்ணப்பதாரரின் தர்க்க ரீதியான பகுப்பாய்வு ஆற்றல் மற்றும் அவரது தீர்மானம் எடுக்கும் திறமை என்பன பரீசிக்கப்படும். |

**அட்டவணை - 03**

01. பரீட்சையின் பெயர் : பொறியியல் உதவியாளர் சேவைக்கு பயிலுநர்களை ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட திறந்த போட்டிப் பரீட்சை

02. பரீட்சை பற்றிய விபரம் : (பல்தேர்வு வினாக்கள் அடங்கிய ஒரு வினாப்பத்திரம்)

| வினாப்பத்திரம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடையும் புள்ளிகள் |
|---|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | ஒரு (01) மணித்தியாலம் | 100 | 40 |
| தொழில்நுட்பப் பரீட்சை | இரண்டு (02) மணித்தியாலங்கள் | 100 | 40 |

03. பரீட்சை நடாத்துவதற்கு அதிகாரம் பெற்றவர் : நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம் அவர்களால் அனுமதியளிக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம்

04. பரீட்சை பற்றிய பாடவிதானம்

| வினாப்பத்திரம் | பாடப்பரப்பு |
|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | விண்ணப்பதாரரின் தர்க்க ரீதியான பகுப்பாய்வு ஆற்றல் மற்றும் அவரது தீர்மானம் எடுக்கும் திறமை என்பன பரீசிக்கப்படும். |
| தொழில்நுட்பப் பரீட்சை வினாப்பத்திரம் (கணிதம், பௌதீகவியல்) | அட்சர கணிதம், ஆள்கூற்று கேத்திர கணிதம், நுண் கணிதம், திரிகோண கணிதம், நீர்மநிலையியல் (Hydrostatics),புள்ளிவிபரவியல், மின்னியல், இயந்திரவியல், வெப்பம் ஆகிய பிரிவுகளின் அறிவு பரீட்சிக்கப்படும். |

**அட்டவணை - 04**

01. பரீட்சையின் பெயர் : பொறியியல் உதவியாளர் பதவிக்கான முதலாவது வினைத் திறன்காண் தடைதாண்டல் பரீட்சை

02. பரீட்சை பற்றிய விபரம்

| வினாப்பத்திரம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடையும் புள்ளிகள் |
|---|---|---|---|
| அளவையியலும் மட்டம் எடுத்தலும் (எழுத்துப் பரீட்சை) | மூன்று (03) மணித்தியாலங்கள் | 100 | 40 |
| (கணிய அளவீடு) (எழுத்துப் பரீட்சை) | மூன்று (03) மணித்தியாலங்கள் | 100 | 40 |

**குறிப்பு** : கனிஷ்ட தொழில்நுட்பப் பரீட்சையில்சித்தியடைந்த பொறியியல் உதவியாளர்கள் முதலாவது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்தவராக கருதப்படுவார்.

03. பரீட்சை நடாத்துவதற்கு அதிகாரம் பெற்றவர் : நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம் அவர்களால் அனுமதியளிக்கப்பட்ட நிறுவனத்தினால்

04. பரீட்சை நடாத்தப்படும் கால எல்லை : ஒரு வருடத்திற்கு இரண்டு முறை

05. பரீட்சை பற்றிய பாடவிதானம்

| வினாப்பத்திரம் | பாடப்பரப்பு |
|---|---|
| அளவையியலும் மட்டம் எடுத்தலும் (எழுத்துப் பரீட்சை) | • அளவையியல் பற்றிய அடிப்படைக் கோட்பாடு<br>• தியேடலைட்டின்(Theodolite) உதவியுடன் குறுக்காக செல்லும் அளவையியல் வரைபடத் திட்டமிடல்(Traverse survey plan)<br>• (Tachemetric survey) அளவையியல்<br>• (Baseline survey) அளவையியல்<br>• பல்வேறு விதமான மட்ட உபகரணங்களின் பாவனையும் அவற்றின் உபயோகமும்<br>• மட்டம் எடுத்தல் உபகரணங்களின் ஒழுங்குபடுத்தல்<br>• குறுக்கு வெட்டுமுக நெடுக்கு வெட்டுமுக வரைபுகள்<br>• (Contour survey) அளவையியல்<br>• (volume calculation) பரிமாண கணிப்பீடு |
| ( கணிய அளவீடு ) (எழுத்துப் பரீட்சை) | கட்டமைப்பு நிர்மாணப் பிரிவு<br>1. தரமான விபரக்குறிப்புகளைப் பாவித்து (Quantity sheet) தயாரித்தல்<br>2. (Bar Shedule) தயாரித்தல்<br>3. மதிப்பீடு தயாரித்தல் |

**அட்டவணை - 05**

01. பரீட்சையின் பெயர் : பொறியியல் உதவியாளர் பதவிக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை

02. பரீட்சை பற்றிய விபரம் :

| வினாப்பத்திரம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடையும் புள்ளிகள் |
|---|---|---|---|
| நிதி ஒழுங்கு விதிகள் | மூன்று (03) மணித்தியாலங்கள் | 100 | 40 |
| தாபன விதிக் கோவை மற்றும் திணைக்கள ஒழுங்கு விதிகள் | மூன்று(03) மணித்தியாலங்கள் | 100 | 40 |

**குறிப்பு** :

பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒரு பாடத்தில் குறைந்தபட்சம் 40% புள்ளிக்குக் குறையாத புள்ளியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். சிரேஷ்ட தொழில்நுட்பப் பரீட்சையில் முதலாவது அரவைாசியில் முதலாவது மற்றும் இரண்டாவது தொகுதிகள் மற்றும் இரண்டாவது அரைவாசியில் இரண்டாவது தொகுதியின் “ஆ” பாடங்களில் சித்தியடைந்த பொறியியல் உதவியாளர்கள் இரண்டாவது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்தவராக கருதப்படுவார்.

03. பரீட்சை நடாத்துவதற்கு அதிகாரம் பெற்றவர் : நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம் அவர்களால் அனுமதியளிக்கப்பட்ட நிறுவனத்தினால்

04. பரீட்சை நடாத்தப்படும் கால எல்லை : ஒரு வருடத்திற்கு இரண்டு முறை

05. பரீட்சை பற்றிய பாடவிதானம்

| வினாப்பத்திரம் | பாடப்பரப்பு |
|---|---|
| நிதி ஒழுங்கு விதிகள் | 1) திரட்டு நிதி<br>2) வருடாந்த மதிப்பீடு<br>3) வருடாந்த மதிப்பீட்டு மாற்றம்<br>4) பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/கணக்கீட்டு உத்தியோகத்தர், அரசிறை வருமான கணக்கீடு, கொடுப்பனவுகளுக்கு அனுமதியளிக்கும் உத்தியோகத்தர், அங்கீகாரமளித்தல், அத்ததாட்சிப்படுத்தல், அதிகாரத்தை வழங்குதல், நட்டங்கள் மற்றும் புத்தகத்திலலிருந்து நீக்குதல், பொது நிதிக்கு பொறுப்பாகவிருத்தல், கொடுப்பனவு மற்றும் பெறுகைகள் தொடர்பான நடைமுறைகள், மதிப்புக்குறைவான காசோலை (dishonored Cheques) தொடர்பான நடைமுறை.<br>5) பொது நிதி பாதுகாப்பு, கணிப்பாய்வு சபை, (Board of Survey) மேலதிகப்பற்று ( Overdraft), வங்கிக் கணக்குகள்.<br>6) வேலை மற்றும் சேவை – நிர்மாணத் திணைக்களம்<br>7) களஞ்சியங்கள் ஆய்வுகளில் பொருட்களை ஏற்றுக்கொள்ளல், கொள்வனவு செய்தல் மற்றும் விநியோகித்தல் தொடர்பான நடைமுறை.<br>8) ஒப்பந்தம் - கேள்வி Tenderநடைமுறைக்கு அப்பால் செயற்படுதல் (Forced Accounts) |
| தாபன விதிக் கோவை மற்றும் திணைக்கள ஒழுங்கு விதிகள் | (i) அலுவலக நிருவாகம் மற்றும் தாபன விதிக்கேவை அரசாங்க சேவை நடைமுறை விதிகளின் VI தொடக்கம் VIII வரையிலான பிரிவுகள்<br><br>தாபன விதிக்கேவையின் பின்வரும் பிரிவுகள்<br><br>VII- மேலதிக நேர கொடுப்பனவு, விடுமுறை தினம் மற்றும் விடுமுறை தினத்திற்கான படி மற்றும் கொடுப்பனவு<br>XII – விடுமுறை (leave)<br>XIII – புகையிரத பயண அனுமதிச் சீட்டு<br>XIV - தீவுக்குள் கடமைப் பொருட்டு பிரயாணம்<br>XVI - விடுமுறைத் தின பிரயாணம்<br>XIX – அரச விடுதி<br>XXVIII – நிருவாக நடைமுறையும் செயற்பாடும்<br>XXX – அரச ஊழியர் சம்பந்தமாக அரசாங்கத்திற்குள்ள உரிமைகள்<br>XLVI – பொதுவான நடத்தையும் ஒழுக்கமும்<br><br>(ii) திணைக்களத்தின் ஒழுங்கு விதிகள்<br><br>நீர்ப்பாசன கட்டளைச்சட்டத்தின் VI ஆவது பிரிவு – 8,9.10,14 மற்றும் ஏனைய ஏற்பாடுகள் அத்தோடு மாவட்ட விவசாயக்குழு பற்றிய ஒழுங்குகள்,<br><br>1994 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க திருத்தப்பட்ட நீர்ப்பாசன கட்டளைச்சட்டம் கமநல அபிவிருத்தி சட்டத்தின் விவசாய அபிவிருத்தி பற்றிய ஒழுங்கு விதிகள்<br><br>வெள்ள பாதுகாப்பு சட்டம் உட்பட நீர்ப்பாசனத் திணைக்கள நடவடிக்கைகள் மற்றும் அதோடு சம்பந்தப்பட்ட ஏனைய கட்டளைச் சட்டங்கள் பற்றிய பொதுவான விளக்கம் |

**அட்டவணை - 06**

01. பரீட்சையின் பெயர் : பொறியியல் உதவியாளர் பதவிக்கான மூன்றாவது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை

02. பரீட்சை பற்றிய விபரம் :

| வினாப்பத்திரம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடையும் புள்ளிகள் |
|---|---|---|---|
| திட்ட முகாமைத்துவம் | மூன்று (03) மணித்தியாலங்கள் | 100 | 40 |
| நீர்ப்பாசனக் கருத்திட்டத்தினைத் திட்டமிடுதல் | மூன்று (03) மணித்தியாலங்கள் | 100 | 40 |

**குறிப்பு** : பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒரு பாடத்தில் குறைந்தபட்சம் 50 % புள்ளிக்குக் குறையாத புள்ளியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். சிரேஷ்ட தொழில்நுட்பப் பரீட்சையில் முதலாவது அரவைாசியில் முதலாவது மற்றும் இரண்டாவது தொகுதிகள் மற்றும் இரண்டாவது அரவைாசியில்“அ” இரண்டாவது தொகுதியின் “ஆ”பாடங்களில் சித்தியடைந்திருப்பின் மூன்றாவது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்தவராக கருதப்படுவார்.

03. பரீட்சை நடாத்துவதற்கு அதிகாரம் பெற்றவர் : நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம் அவர்களால் அனுமதியளிக்கப்பட்ட நிறுவனத்தினால்

04. பரீட்சை நடாத்தப்படும் கால எல்லை : ஒரு வருடத்திற்கு இரண்டு முறை

05. பரீட்சை பற்றிய பாடவிதானம்

| வினாப்பத்திரம் | பாடப்பரப்பு |
|---|---|
| திட்ட முகாமைத்துவம் | நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு உரிய நிதி, இயந்திர உபகரணங்கள், தொழிலாளர்கள், நிர்மாணத்திற்கான மூலப்பொருள் சம்பந்தமான முகாமைத்துவ அறிவு என்பவற்றைப் பரீட்சித்தல். |
| நீர்ப்பாசனக் கருத்திட்டத்தினைத் திட்டமிடுதல் | நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு உரிய அனைத்து பிரிவுகளினதும் அடிப்படைத் திட்டமிடல் அறிவினை மதிப்பிடல்(அணை, கட்டிடங்கள், பாதைகள், வாய்க்கால், மதகு, கலிங்கல், அணைக்கட்டு, வாயில் போன்றன.) |

**அட்டவணை - 07**

பொறியியல் உதவியாளர் சேவையின் விஷேட தரத்திற்கு பதவியுயர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சை புள்ளிகள் பின்வரும் அடிப்படையில் வழங்கப்படும்.

1. சேவைமூப்பு - 60 புள்ளிகள்

(நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவையின் I ஆம் தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்டு 06 வருடங்கள் செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக்கலம் பூர்த்தியான பின்னர் வரும் செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக்கலத்தைப் பூர்த்தி செய்துள்ள ஒவ்வொரு வருடத்திற்குமாக 10 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

2. துறை சார் அறிவு மற்றும்புரிந்துணர்வு -30 புள்ளிகள்

| | |
|---|---|
| புலனாய்வு | - 6 புள்ளிகள் |
| நிர்மாணம் | - 6 புள்ளிகள் |
| நீர் முகாமைத்துவம் | - 6 புள்ளிகள் |
| திட்ட முகாமைத்துவம் | -6 புள்ளிகள் |
| பராமரித்தல் மற்றும் செயற்படுத்தல் | -6 புள்ளிகள் |

3. செயலாற்றுகை மதிப்பீடு(அண்மைய ஐந்து வருடங்கள்) - 10 புள்ளிகள்

| | |
|---|---|
| அதி சிறந்த / உன்னத | -10 புள்ளிகள் |
| சராசரியை விட மேல் | -08 புள்ளிகள் |
| திருப்திகரமான | - 06 புள்ளிகள் |
| திருப்தியற்ற நிலை | - 00 புள்ளிகள் |

04-666

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.